Sponsor Tasks

Created for Endemol Shine India Ltd

Bigg Boss Tamil Season 7

Conceptualised and written by Rajesh S S.

Task & Launch letters

AMFI

Mutual Funds Sariyaanadhu, இரு வீட்டாருக்கும், தலா **50 points** மதிப்புள்ள ஒரு **coin** தருவதில் மகிழ்ச்சி அடைகிறது.

இந்த மதிப்பு மிக்க சேமிப்ப பெருக்குவது உங்களோட கை-ல தான் இருக்கு.

ஒவ்வொரு வாரமும் **Captain** ஆகற நபருக்கு, **50 points** மதிப்புள்ள ஒரு **coin** வழங்கப் படும்.

Yugendran! இந்த வாரம் நீங்க **Captain** ஆனதுக்காக, உங்களுக்கு கூடுதலாக, **50 points** மதிப்பு கொண்ட ஒரு **coin** பரிசா வழங்கப் படுகிறது.

வாழ்க்கைல எப்படி வீடு, **retirement** போன்ற இலக்குகளுக்காக, **mutual funds-ல invest** பண்ணி, பயனடைய முடியுமோ, அதே போல இந்த **coin-கள** பயன்படுத்தி இந்த வீட்ல, **favorite food**, மற்றும் அவரவர் **family** கூட **connect** பண்ற வாய்ப்பு, போன்ற பல **luxury** பயன்கள நீங்க அடையலாம்.

அதிக **coin-கள** சேமிச்சு வச்சு, உங்களுக்கே உங்களுக்காக ஒரு **special luxury**-ஐ வாங்கிக் கொள்ளும் வாய்ப்பு வழங்கப் படும்போது, பயன் படுத்திக் கொள்ளலாம். அதற்கான அறிவிப்பு வரும் வரை, coin-கள சேமிக்கறதே உங்கள் நோக்கமா இருக்கணும்.

அதிக **coin-கள** அதிக காலம் சேமிச்சு வச்சிருந்தால், உங்க வளம் பெருகி, உங்களுக்கு பெரிய பரிசுகள் கிடைக்கலாம்.

Bedroom-க்கு வெளியே ஒரு திரை அமைக்கப் பட்டிருக்கு.

Captain, அங்கே போடப் பட்டிருக்கும் **Yellow Mark**-இல் நின்று இந்த letter-ஐப் படிக்கணும். மற்ற housemates, **Red Line**-இல் நிக்கணும். இந்த letter-ஓடு அனுப்பப் பட்ட **coin tray-**யை, திரைக்கு பக்கத்தில் இருக்கும் **pedestal-**இல் வைக்கவும்.

அதன் பின், அந்த திரை-ஐ **captain** திறந்து**, reveal** செய்யணும். திரைக்குள்ளே, **housemates** பெயர் போடப் பட்டுள்ள '**Mutual Funds** சரியானது' **boxes** வைக்கப் பட்டிருக்கு. ஒவ்வொருத்தரா வந்து, அவரவரோட பெட்டி-ல **coin-**அ சேமிக்கணும்.

Small Boss Housemates-க்கு, Captain அவரவர் '**Mutual Funds** சரியானது' பெட்டிகளைத் தந்து, **coin-**களை போடச் செய்து, அவற்றைத் திரும்பப் பெற்று, **rack-**இல் வைக்கணும்.

வளம் பெருகட்டும்...!

Jeyachandran

அன்பான ஹவுஸ்மேட்கள் மற்றும் பிக்பாஸின் அற்புதமான பார்வையாளர்கள் அனைவருக்கும் ஜெயச்சந்திரன் டெக்ஸ்டைல்ஸின் வணக்கம்! 25 வருடங்களாக சென்னை மக்களின் லை:ப்ஸ்டைலை, ஸ்டைலாகவும் வசதியாகவும் மாற்றியதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்.

Jeyachandran - Fashion, Life Style, Super Market, Gold House, Furniture, Home appliances, Food Court, and Abi Bakery.

கால் நூற்றாண்டு காலமாக, மாடர்ன் எலக்ட்ரானிக்ஸ், வீட்டு உபயோகப் பொருட்கள், நேர்த்தியான பாத்திரங்கள், அத்தியாவசிய மளிகை சாமான்கள் மற்றும் நேர்த்தியான மரச்சாமான்கள் ஆகியவற்றுடன், ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு மலிவு விலையில், உயர்தர :பேஷனை வழங்கி வருகிறோம். சென்னையில் உள்ள எங்கள் நான்கு கடைகள், Ranganathan Street, Usman Road, Pallikaranai, Tambaram, **அனைத்திற்கும் மையமாக உள்ளன..**

ஆனால் இன்று கதையில் ஒரு திருப்பம். எங்கள் வெள்ளி விழாவை முன்னிட்டு, முன் எப்போதும் இல்லாத வகையில் எங்கள் அற்புதமான ஆடைகளை காட்சிப்படுத்த நாங்கள் உங்கள் வீட்டிற்குள் நுழைகிறோம். இந்த ஸ்டைலிஷான ராம்ப் வாக் மூலம் திகைக்க தயாராகுங்கள்!

Fantastic Jeyachandran presents **FANTASTIC DUO**

இது **ஒரு fashion show**. இந்த task, இரண்டு வீட்டாருக்குமானது.

Activity area-வில் ஒரு **ramp** அமைக்கப்பட்டிருக்கு.

Housemates, தங்களுக்குள் **8 ஜோடிகளாக** பிரிந்து, **Bigg Boss-க்கு** தெரிவிக்கணும்.

7 ஜோடிகள் fashion **ramp walk** செய்ய, **ஒரு ஜோடி இந்த show-வை judge** செய்யணும்.

முக்கிய குறிப்புகள்:

1. **Show ஆரம்பிக்கறதுக்கு முன்னாடி**, **buzzer அடிச்சதும்**, judges, **show-வை அறிமுகப் படுத்தி பேசிவிட்டு**, அவர்களுக்கான **panel-இல் உட்காரணும்**.

2. அதன் பின்னர், **ஒவ்வொரு ஜோடியும் Ramp-இல் ஏறியதும்**, **music** play செய்யப்படும். **Music stop ஆகும் வரை,** அவர்கள் **creative-ஆக ramp walk** செய்யலாம். **Ramp walk செய்யும் ஜோடியைத் தவிர**, மற்ற ஜோடிகள் **இருக்கைகளில் உட்காரணும்**.

3. **எல்லா ஜோடிகளும்** ramp walk முடிச்சதும், **judges ramp walk செய்யணும்**.

4. அதன் பிறகு, **judges** எந்த ஜோடி **ramp walk-இல் Fantastic Duo** என்று தேர்ந்தெடுத்து அறிவிக்கணும்**.** அந்த ஜோடியில் இருவருக்கும் தலா **10000** மதிப்புள்ள **Fantastic Jeyachandran envelope voucher**-கள் மற்றும் **Voucher board-ஐயும்** judges வழங்கணும்.

5. அவர்களுக்கு, **Fantastic Duo**, என்ற **Sash-களை judges வழங்கணும்**.

Please note: Ramp walk செய்பவர்களின் **presentation**, **walk**, மற்றும் **coordination-ஐ base பண்ணி**, judges **judge செய்யணும்**.

Haier

Haier பெருமையுடன் அறிமுகப்படுத்துகிறது, இந்தியாவிலேயே design செய்து, உருவாக்கப்பட்ட, இந்தியாவின் முதல் Bottom-Mounted Refrigerator. இந்த refrigerator, ஒரு game-changer. பயனாளர்களின் சௌகரியத்தை அதிகப்படுத்தும் விதமாக, refrigerator மேலேயும், freezer கீழேயும் இருக்கும்படி, 90% குறைவான bending-காக இது வடிவமைக்கப் பட்டிருக்கிறது. இதனால், பயனாளர்கள் எளிதாக, நின்றபடியே refrigerator-ஐ பயன்படுத்தலாம். இந்த refrigerator-இல் உள்ள 14 mode-கள், பயனாளர்கள் எளிதாக, தங்கள் பலதரப்பட்ட தேவைகளுக்கு ஏற்றவாரு இதை உபயோகிக்க உதவுகிறது. இதன் தனிச்சிறப்பு அம்சமாக, அதிக காய்கறி பழங்களை சேமிக்க, இரு மடங்கு பெரிய vegetable box-உம், தனி fruit box-உம் வழங்கப் பட்டுள்ளது. Haier, இந்த refrigerator-இன் மூலம், இந்திய வாடிக்கையாளர்களின் தனித்துவமான தேவைகளை, சிறப்பாக அணுகி, நடைமுறையையும், புதுமையையும் கச்சிதமாகக் கலந்து modern design-இல் வழங்கியுள்ளது.

Round 1

Housemates தங்களுக்குள் ஒரு நபரை **Judge**-ஆக தேர்ந்தெடுக்கணும். 16 housemates, 8 பேர் கொண்ட **2 அணிகளாக** பிரிந்து, Bigg Boss-இடம் அறிவிக்கணும்.

Garden area-வில், 2 அணிகளுக்கும் **'ஹயர்' Refrigerator**-இன் தனித்தனி **cutout**-கள் வைக்கப் பட்டிருக்கு. அதே போல, உணவு பொருட்களின் படங்கள் கொண்ட **magnetic boards** பரப்பி வைக்கப் பட்டிருக்கு.

இதை ஒரு **relay race** போல விளையாடணும். ரெண்டு அணிகள்ல இருந்தும் ஒவ்வொரு player ஒரே நேரத்துல விளையாடணும்.

Judge ஒவ்வொரு round-இலும் ஒரு உணவுப் பொருளின் **பெயரும்**, அந்த பொருளின் படம் கொண்ட magnetic boards garden-இல் **எத்தனை** இருக்கிறது என்றும் சொல்வார்.

Judge சொன்ன உணவுப் பொருள், **top refrigerator**-இல் சேருமா, அல்லது **bottom freezer**-இல் சேருமா என்று கொடுக்கப்பட்டுள்ள **placard**-ஐ வைத்து, players காட்டணும். அதன் பிறகு, 'top refrigerator' அல்லது 'bottom freezer' என்று **உரக்க சொல்லிக்கொண்டே**, அந்த பொருளின் படம் கொண்ட magnetic board-களை தேட வேண்டும்.

எடுத்துக்காட்டாக, Judge '**apple 8**' என்று சொல்வார்கள். Top refrigerator என்று சொல்லிவிட்டு, அதற்கான **placard-ஐ எடுத்துக்கொண்டு**, 'top refrigerator', 'top refrigerator' என்று சொல்லிக்கொண்டே apple படம் கொண்ட **எட்டு magnetic board**-களை garden-இல் தேட வேண்டும்.

ஒருமுறை, **ஒரு magnetic board மட்டுமே எடுத்து வந்து**, cutout-இல் ஒட்ட வேண்டும். Judge சொன்ன எண்ணிக்கையில் magnetic boards ஒட்டப் பட்டதும், round முடியும். அடுத்த 2 players விளையாடணும்.

ஒவ்வொரு round-இலும், **அதிக magnetic boards** ஒட்டி இருக்கும் **அணிக்கு**, Judge **1 point**-அ வழங்கணும்.

8 round-களும் முடியும் போது, எந்த அணி **அதிக points** வாங்கி இருக்கோ, அந்த அணி வெற்றி பெற்ற அணியாகும்.

ஒரு அணியினர் **blue line**-இலும், மற்றொரு அணியினர் **white line**-இலும் நிக்கணும். விளையாடுபவர்கள் cutout-களின் முன்னால் வந்து நிக்கணும். Judge yellow mark-ல நிக்கணும்.

Round 2:

Activity area-வில் உணவுப் பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்ட **Haier Refrigerator** வைக்கப் பட்டுள்ளது.

வெற்றி பெற்ற அணியில் இருந்து 2 பேர் refrigerator அருகே போடப்பட்டுள்ள **X marks**-இல் நின்னு, ribbon-ஐ பிரித்து, **Refrigerator-ஐத் திறந்து**, அதன் நன்மைகள், மற்றும் சிறப்பம்சங்கள் பற்றி creative-ஆக பேச வேண்டும்.

வெற்றி பெற்ற அணியின் மற்ற housemates red line-இல் நிக்கணும். எதிரணியினரும், Judge-உம், yellow line-இல் நிக்கணும்.

Vasanth & Co

இந்தியாவின் நம்பர்.1 டீலர் வசந்த் & கோ-வின் தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனை.

தனது அதிரடி விலை குறைப்பு , மிக குறைந்த விலைக்கு உத்திரவாதம், ஏராளாமான பரிசுகள் போன்ற மிக சிறந்த விற்பனை திட்டங்கள் மூலம் வாடிக்கையாளர்கள் மனதில் நீங்காத இடம் பிடித்த India வின் நம்பர்.1 டீலர் வசந்த் & கோ, தமிழகம், பாண்டிச்சேரி, பெங்களூரு உட்பட மொத்தம் 113 கிளைகள் உடன் இன்று 114 ஆவது கிளையை திருச்செங்கோட்டில் கோலாகலமாகத் திறந்திருக்கிறது.

வசந்த் & கோ தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனையை துவக்கியுள்ளது. இச்சிறப்பு விற்பனையில் அனைத்து முன்னணி வீட்டு உபயோகப் பொருட்களும் மிகக்குறைந்த விலையில், எளிய தவணை முறை வசதியுடன் பொருட்களை எடுத்து செல்லுங்கள்.

பல்வேறு வகையான மொபைல் போன்கள், AC, Refrigerator, washing machine, microwave oven, mixie, grinder, gas stove, water purifier மற்றும் அனைத்து வீட்டு உபயோக பொருட்களை சுலபமான முறையில் வாங்கி செல்லலாம்.

Vasanth & Co-வின் தீபாவளி கொண்டாட்டம்

Part 1:

Garden area-வில் ஒரு catapult (கவண்) அமைக்கப் பட்டிருக்கு. எதிரே basket-கள் வைக்கப் பட்டிருக்கு. Housemates கவண் மூலம் பந்துகள basket-களில் எறியது தான் task.

விபரங்கள்:

1. Poornima, Bravo, judge-ஆக இருக்கணும்.
2. மற்ற 14 housemates-களில், team-களை தேர்ந்தெடுக்க ஒரு bowl-இல் chit-கள் வைக்கப் பட்டுள்ளன. அதில் 'Team A', 'Team B' chit-களை எடுக்கும் நபர்கள் 7 பேர் கொண்ட இரு அணிகளாக பிரியவும்.
3. Buzzer அடித்ததும், Team A-இல் இருந்து, ஒரு player விளையாட வரணும்.
4. கவணின் அருகே இருக்கும் pedestal-இல் உள்ள Vasanth & Co தீபாவளி offer card-களில் ஒரு card-ஐ எடுத்து, அந்த offer-ஐ மக்களுக்கு உரக்க படிக்கணும். படித்து விட்டு, அந்த card-ஐ, அருகே உள்ள empty pedestal-இல் வைக்கவும்.
5. அதன் பிறகு, போட்டியாளர் இரண்டு பந்துகள ஒவ்வொன்றாக catapult மூலமா எறிய முயற்சிக்கணும்.
6. அடுத்து Team B-இல் இருந்து, ஒரு player விளையாடணும்.

ஒரு நபர், ஒரு பந்த basket-ல போட்டால், ஒரு point அந்த நபரோட அணிக்கு கிடைக்கும்.

ஒவ்வொருவர் விளையாடி முடித்ததும், judges scoreboard-இல் அந்தந்த அணிக்கான point-ஐ எழுதணும்.

Relay போல, மாறி மாறி 14 பேரும் விளையாடியதும் part 1 முடியும். எந்த அணி அதிக points பெற்றிருக்கோ, அந்த அணி வெற்றி பெற்ற அணி ஆகும். Judges இதை அறிவிக்கணும்.

போட்டியாளர்கள் white line-இல் நிக்கணும். Judges yellow line-ல நிக்கணும்.

Catapult-ஐ, அதில் கட்டப் பட்டிருக்கும் கயிறை பிடித்து மட்டுமே இழுக்கணும்.

Part 2:

1. Activity area-வில் Vasanth & Co stall அமைக்கப் பட்டிருக்கு. Part 1-இல் வெற்றி பெற்ற அணியினர், customer-களாக Vasanth & Co stall-க்கு செல்லவும். தோற்ற அணியினர் கொடுக்கப் பட்டுள்ள yellow line-இல் நிக்கணும்.
2. Part 1-இல் judges-ஆக இருந்த Poornima & Bravo, இந்த Part-இல் sales persons-ஆக இருக்கணும்.
3. முதலில் ஒரு sales person, customer-களை, Vasanth & Co showroom-க்கு வரவேற்று, தீபாவளி offer-களை creative-ஆக விவரிக்கணும். Buzzer to buzzer.
4. அடுத்து இன்னொரு sales person, தீபாவளி offer-களை creative-ஆக விவரிக்கணும். Buzzer to buzzer.
5. அதன் பிறகு, வெற்றி பெற்ற அணியினர் 7 பேரும், pedestal-இல் உள்ள slogan card-களை எடுத்து ஒவ்வொருவரும், Vasanth & Co-வைப் பற்றி creative-ஆக slogan எழுதி pedestal-களில் வைக்கவும். பிறகு, 7 பேரும், yellow line-க்கு செல்லவும்.
6. Sales Persons எல்லா slogan-களையும் ஒவ்வொன்றாக உரக்கப் படிக்கவும்.
7. Part 1-இல் தோற்ற அணியினர், 7 slogan-களில் சிறந்த slogan-ஐ தேர்ந்தெடுத்து அறிவிக்கணும்.
8. Sales person, 'slogan contest winner'-க்கான pedestal-இல், உள்ள letter-ஐ உரக்கப் படிக்கவும்.
9. பிறகு, அந்த நபருக்கு pedestal-இல் வைக்கப் பட்டிருக்கும் special gift-ஐ, 'Happy Diwali' platform முன்னால் நின்று, sales persons வழங்கணும். வெற்றி பெற்றவர் அங்கேயே நின்று gift-ஐ unwrap செய்யணும்.
10. பிறகு, part 1-இல் வெற்றி பெற்ற அணியினர், சிறப்பாக offer-களை விவரித்த sales person யார் என்பதை முடிவு செய்யணும். அந்த

அணியில் இருந்து ஒருவர், 'best sales person' pedestal-இல் வைக்கப் பட்டிருக்கும் letter-ஐப் படித்து விட்டு, special gift-ஐ, 'Happy Diwali' platform முன்னால் நின்று அந்த நபருக்கு வழங்கணும்.

முடிவில், அனைத்து housemates-களும் சேர்ந்து, மக்களுக்கு Vasanth & Co-வின் தீபாவளி நல்வாழ்த்துகளை தெரிவிக்கணும்.

எந்த brand-களையும், பொருட்களையும் பற்றி கேலி, கிண்டல் செய்யக் கூடாது.

ISWARYA FERTILITY CENTRE

கடந்த 38 வருடங்களாக இந்தியா மற்றும் உலகநாடுகள் பலவற்றை சேர்ந்த மக்களின் குழந்தையின்மை கவலையை நீக்கி, ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட குழத்தையில்லா தம்பதிகளுக்கு குழந்தை பேறு கிடைக்க செய்து, இப்பொழுது 40 க்கும் மேற்பட்ட கிளைகளுடன், மற்றும் அதிக வெற்றி வாய்ப்புடன் சிகிச்சை அளித்து வரும் இந்தியாவின் மிகப்பெரிய தொடர் கருத்தரித்தல் மையம் தான் நமது ISWARYA FERTILITY CENTRE. தமிழ்நாடு முழுவதும் மற்றும், Pondicherry, Karnataka, Andhra Pradesh, Telangana, Maharashtra, Madhya Pradesh, West Bengal, மற்றும் Uttar Pradesh-இல் கிளைகள் உள்ளன.

“ISWARYA FERTILITY CENTRE”- உங்களுக்கும் ஒரு குழந்தை

Housemates ஒரு judge-ஐ தேர்ந்தெடுக்கணும். மற்ற 14 பேரும், 7 பேர் கொண்ட இரண்டு அணிகளாக பிரியணும்.

முதலில் ஒவ்வொரு அணியும் **ISWARYA FERTILITY** என்ற வார்த்தைகளின் alphabets போடப்பட்ட balloon-களை ஊதி, கொடுக்கப்பட்டுள்ள stand-இல் ஒட்டவும். அடுத்து, Activity area-வில் வைக்கப்பட்டுள்ள பலகைகளை படகு போல பயன்படுத்தி, முன்னேறி, தொட்டிலில் வைக்கப்பட்டிருக்கும், குழந்தை பொம்மையை எந்த அணி முதலில் எடுக்குதோ, அந்த அணி வெற்றி பெற்ற அணியாகும்.

Round 1

ஒரு pedestal-இல், ஆங்கில alphabet-கள் print செய்யப்பட்ட பலூன்களும், plain balloon-களும் கலந்து வைக்கப் பட்டிருக்கு. ஒவ்வொரு அணியும் ‘**ISWARYA**’ என்ற பெயரில் உள்ள alphabets கொண்ட பலூன்களை ஊதி, கட்டி, board-இல் உள்ள **first line**-இலும், ‘**FERTILITY**’ என்ற வார்த்தையில் உள்ள alphabets கொண்ட பலூன்களை ஊதி, கட்டி, board-இல் உள்ள **second line**-இலும் ஒட்டணும்.

ஒரு அணி, **pink, blue**, pink, blue என்ற வரிசையிலும், இன்னொரு அணி, **blue, pink,** blue, pink என்ற வரிசையிலும் balloon-களில் வார்த்தைகளை form செய்யணும்.

Buzzer அடிச்சதும், இரண்டு அணிகளில் இருந்தும் ஒவ்வொருத்தர் விளையாட தொடங்கணும்.

Relay race போல இரு அணிகளில் இருந்தும், ஒவ்வொருத்தர் பலூனை ஊதி board-இல் ஒட்டியதும், அந்த அணியில் இருந்து அடுத்த நபர் விளையாடணும்.

ஒரு அணி 16 balloon-களையும் சரியான வரிசையில் ஊதி, கட்டி, board-இல் ஒட்டியதும், உடனே அடுத்த round-க்கு செல்லலாம்.

போட்டியாளர்கள் yellow line-களில் நிக்கணும். ஒரு நபரின் turn முடிந்ததும், அவர் yellow line-இல் கடைசியில் நிக்கணும்.

Round 2

ஒவ்வொரு அணியில் இருந்தும் நான்கு பேர் இந்த round-ல விளையாடணும்.

Activity area-வில் இரண்டு pathway-கள் போடப்பட்டுள்ளன. பலகைகளை அவரவர் pathway-களில் roller-களின் உதவியுடன், படகுகளை போல நகர்த்தணும்.

பலகையின் மேல் நான்கு பேரும் ஏறி, இருவர் துடுப்பு போட்டு பலகையை முன்நோக்கி செலுத்த, மற்ற இருவர் பலகையின் அடியில் இருக்கும் roller-களை சரியாக இடம் மாற்றி பலகை நகர உதவணும்.

ஒவ்வொரு பலகைக்கு அடியிலும் **6 roller**-கள் உள்ளன.

Roller-களை இடம் மாற்றும் நபர்கள், பலகையின் மேலே, அதன் முன் பகுதியிலும் பின் பகுதியிலும் ஒவ்வொருவர் உட்கார்ந்து இருக்கணும்.

2 துடுப்புகளையும் ஒவ்வொருவர் pathway-இன் அருகே ஊன்றி பலகையை முன்நோக்கி உந்தித் தள்ளணும்.

பலகை நகரத்தொடங்கியதும், பின் பகுதியின் கடைசி roller-ஐ, அங்கே இருப்பவர் எடுத்து, முன்னால் இருப்பவருக்கு தரணும். அவர் அந்த roller-ஐ பலகைக்கு முன்னால், அதன் அடியில் வைத்து பலகை நிற்காமல் போக உதவணும்.

எந்த அணி pathway-யின் முடிவை அடைந்து, குழந்தை பொம்மையை முதலில் எடுக்குதோ, அந்த அணி வெற்றி பெற்ற அணியாகும்.

அந்த அணியினர் குழந்தையை வைத்து கீழே தரப்பட்ட jingle-ஐ பாட வேண்டும்.

போட்டியாளர்கள் தவிர மற்ற housemates red line-களில் நிக்கணும்.

Judge, white mark-ல நிக்கணும்.

வெற்றி பெற்ற அணியினர் பாட வேண்டிய **jingle:**

ஐஸ்வர்யா வந்தோம்; கவலைகள் மறந்தோம்; இனி எங்களுக்கும் ஒரு குழந்தை..!

எந்த brand-ஐயோ, வைக்கப்பட்டிருக்கும் prop-களையோ, கிண்டல் கேலி செய்யக்கூடாது.

MUTUAL FUNDS REDEMPTION

'Mutual Funds சரியானது' coin-கள சேமித்து வைத்திருக்கும் housemates-க்கு, இதோ, அவற்றை redeem செய்யும் முதல் வாய்ப்பு.

உங்கள் 'Mutual Funds சரியானது' point-களை பயன்படுத்தி சில special luxury-களை நீங்கள் பெறலாம்.

இந்த முறை Redeem செய்ய தரப்படும் options:

100 points (2 coins) - Large pizza
50 points (1 coins) - chocolate Brownie

நினைவில் கொள்ளுங்கள்: இறுதி redemption-இன் போது, அதிக coin-கள சேமிச்சு வச்சுருக்கற நபர், ஒரு special luxury-ஐ வாங்கிக் கொள்ளும் வாய்ப்பு வழங்கப் படும்போது, பயன் படுத்திக் கொள்ளலாம். இப்போது செலவழிக்காமல், வருங்கால தேவைக்காக சேமித்து வைப்பது, உங்கள் விருப்பம்.

Redeem செய்ய விரும்பும் housemates, தங்கள் பெயர்களையும், redeem செய்து பெற விரும்பும் உணவு பொருளையும் Captain-இடம் சொல்லவும். Captain, அவற்றை, confession room camera முன்னால் தெரியப் படுத்தவும்.

அதன் பிறகு, அந்த நபர்களின் 'Mutual Funds சரியானது' பெட்டிகளின் சாவிகள் அனுப்பப் படும்.

ATOMBERG

Atomberg, 2012-ஆம் ஆண்டு, இரண்டு **IIT Bombay graduate-**கள், **Manoj Meena and Sibabrata Das-**ஆல் தொடங்கப்பட்டது. இந்தியாவில் **energy-efficient BLDC fan-**களில் **Atomberg** முன்னோடியாக விளங்குகிறது. இந்த வகை **fan-**கள் **65%** வரை குறைவான மின்சாரத்தை பயன்படுத்துகிறது.

Atomberg fan-கள், **modern** ஆன **sleek design-**இல், **remote-**இல் **operate** செய்யும்படியாக உருவாக்கப் படுகிறது.

ஏராளமான விருதுகளையும், பெருமைகளையும் பெற்றிருக்கும் **Atomberg,** சமீபத்தில் இந்திய குடியரசுத் தலைவரிடம் இருந்து, **National Energy Conservation Awards (NECA)** நிகழ்வின் போது, கௌரவிக்கப் பட்டது.

இந்தியாவின் முன்னணி **e-commerce** வலைதளங்களில், **fan-**கள் பிரிவில், அதிக **rating** பெற்ற **brand-**ஆக **Atomberg** உள்ளது. நாடு முழுவதும், **30000-**க்கும் மேற்பட்ட கடைகளில் **Atomberg fan-**கள் விற்கப்படுகிறது. அண்மைக் காலத்தில், **Mixer Gridners** மற்றும் **Smart Locks** போன்ற பிற பிரிவுகளிலும் **Atomberg** செயல்படத் தொடங்கியுள்ளது.

Atomberg ‘Fan’tasy

ஒரு bowl-இல் chit-கள் போடப்பட்டிருக்கு. அதில் ஒவ்வொரு housemate-உம் ஒவ்வொண்ண எடுக்கணும். **2 ‘judge’ chit**-கள், **6 Team A chit-**கள், **6 Team B chit**-கள் கொடுக்கப்பட்டிருக்கு. ‘Judge’ chit-கள எடுக்கறவங்க நடுவர்களாகவும், Team A, Team B chit-கள எடுக்கறவங்க ரெண்டு அணிகளாகவும் பிரிஞ்சு அறிவிக்கணும்.

Activity area-வின் ஒரு பக்கம் உள்ள stand-இல், **‘ATOMBERG’** என்ற வார்த்தையின் எழுத்துகள் கொண்ட **8** பந்துகள் கலந்து வைக்கப்பட்டிருக்கு.

எதிர் பக்கம் உள்ள stand-இல், ஒரு **puzzle-**இன் **16 piece-**கள் வைக்கப்பட்டிருக்கு.

பந்துகளையும், puzzle piece-களையும், போட்டியாளர்கள் ஒரு tray-யை கால்களுக்கு இடையே கட்டிக்கொண்டு jump பண்ணிய படி, இடம் மாற்றி சரியா arrange பண்றது தான் task.

விபரங்கள்:

முதல் போட்டியாளர், கொடுக்கப்பட்டுள்ள tray-யை, கால்களின் ankle-களின் இடையே கட்டிக்கொண்டு, pathway-யின் **start point**-ல இருந்து, **'A'** என்ற எழுத்து கொண்ட பந்த எடுத்து அந்த tray-ல வச்சு, **jump** பண்ணிய படி மறுமுனைய reach பண்ணி, stand-ல பந்த வைக்கணும். அந்த stand-ல இருக்கும் **2 puzzle piece**-கள collect பண்ணி, jump செஞ்சபடி திரும்பி start point-க்கு வந்து, puzzle piece-கள puzzle board-ல வைக்கணும். போட்டியாளர் இப்போது tray-யை கழற்றலாம்.

அடுத்தடுத்த போட்டியாளர்கள், ஒவ்வொரு எழுத்த ('T', 'O', etc) கொண்ட பந்துகள எடுத்து இதே போல தொடரணும்.

Relay போல ஒருவர்பின் ஒருவராக, ஒரு அணியில் 6 போட்டியாளர்களும் விளையாடி, மொத்தம் 16 puzzle piece-களையும் collect செஞ்சதுக்கு அப்பறம், அணியில் இருந்து ஒருவர், puzzle board-இல், puzzle-ஐ சரியாக arrange செய்து முடிக்கணும். பிறகு, அந்த puzzle-இல் எழுதப்பட்டுள்ள ATOMBERG fan-இன் சிறப்பம்சத்தை அந்த அணியினர் உரக்க படிக்க வேண்டும்.

இரண்டு அணிகளும், puzzle-கள அடுக்கி முடிச்சதும் judges puzzle-கள check பண்ணி வெற்றி பெற்ற அணிய அறிவிக்கணும். அந்த அணியிடம் pedestal-இல் வைத்திருக்கும் remote-ஐ judges வழங்கணும். அணியில் இருந்து ஒருவர் அந்த **fan-ஐ ON** செய்யணும்.

விளையாடுபவர்களை தவிர மற்ற housemates, white line-இல் நிக்கணும். Judges yellow line-ல நிக்கணும்.

விதிமுறைகள்:

- Fan அருகே போகக் கூடாது.
- பந்து tray-யை விட்டு கீழே விழுந்தால், மீண்டும் start point-ல இருந்து தொடங்கணும்.

G Square task 1

ஜி ஸ்கொயர் நிறுவனம் தென்னிந்தியாவின் மிகப் பெரிய Plot Promoter. ஒரு real estate நிறுவனமாகவும் , நில ஒருங்கிணைப்பாளராகவும் இருக்கும் ஜி ஸ்கொயர் தன்னுடைய 11வது ஆண்டை நிறைவு செய்து 12 வது ஆண்டுக்குள் அடியெடுத்து வைக்கிறது.

2012 ல் தொடங்கப்பட்ட ஜி ஸ்கொயர் நிறுவனம் நில ஒருங்கிணைப்பில் ஈடுபட்டு பல்வேறு பெரிய நிறுவனங்களுக்கு பல ஏக்கர் நிலங்களை வெற்றிகரமாக ஒருங்கிணைத்துக் கொடுத்துள்ளது.

கொரொனா காலகட்டத்திற்கு பின் 2020 ஆம் ஆண்டு முதல் retail real estate-இல் விற்பனையைத் துவங்கியது.

மற்ற real estate நிறுவனங்கள் அடுக்குமாடி குடியிருப்புகளைக் கொடுத்து வந்த அதே இடத்தில் தனி மனைகளை நகரத்தின் மையப்பகுதியில் விற்பனை செய்தது. இன்று வரை 100 மனைத்திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, ஓசூர், தேனி, திண்டுக்கல், ஆம்பூர், உடுமலைப்பேட்டை போன்ற முக்கிய நகரங்களில் ஒட்டு மொத்தமாக 50 மில்லியன் சதுர அடி நிலங்களை தயார் செய்துள்ளது.

ஜி ஸ்கொயர் நிறுவனத்தில் தற்போது 1000-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் 10,000 க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்கின்றனர்.

11 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் விதமாக ஜி ஸ்கொயரின் தற்போதைய மனைத் திட்டங்களில் இருந்து மனை பதிவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு 11 கிராம் தங்கத்தை பரிசாக வழங்கி வருகிறது.

G Square-இன் 11-வது Anniversary கொண்டாட்டம்

Housemates-க்கு ஒரு bowl-இல் chits தரப்பட்டுள்ளது. அதில் 2 chit-களில் judge என்று எழுதப்பட்டுள்ளது. Team A, team B, team C என்று தலா 4 chit-களில் எழுதப்பட்டுள்ளது.

'Judge' என்ற chit-களை எடுப்பவர்கள் **நடுவர்களாகவும்**, **Team A, team B, team C** chit-களை எடுப்பவர்கள் மூன்று அணிகளாகவும் பிரிஞ்சு Bigg Boss-க்கு அறிவிக்கணும்.

ஒவ்வொரு அணியும் கொடுக்கப்பட்ட point-களை பயன்படுத்தி, G Square-க்காக creative-ஆக ஒரு advertisement உருவாக்கி நடிச்சு காட்டறது தான் task.

விதிமுறைகள்:

1. மேலே குறிப்பிட்டுள்ள படி, judge-களும், மூன்று அணிகளும் பிரியணும்.

2. வெவ்வேறு theme-களும் pointer-களும் கொண்ட 3 card-கள் தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு அணியும் ஒரு card-ஐ தேர்ந்தெடுக்கணும்.

3. அந்த card-ல இருக்கற theme-அ base பண்ணி, தரப்பட்டுள்ள pointer-கள பயன்படுத்தி அவங்களோட advertisement-அ உருவாக்கணும். இந்த card-கள் judge-களிடமும் தரப்படும். அவர்கள் அதை வைத்து advertisement-களை check செய்யலாம்.

4. ஒவ்வொரு அணியாக Activity area-வில் உள்ள platform-க்கு போகணும். Buzzer அடிச்சதும், அவங்க prepare செஞ்ச advertisement-அ, நடித்து காட்டணும்.

5. மூன்று அணிகளும் நடிச்சு முடிச்சதும், judges அவர்கள் performance பற்றிய comment-களை சொல்லணும். பிறகு, brand communication-அ அதிக Creative-ஆகவும், அதிக Entertaining-ஆகவும் present செஞ்ச அணியை, judges தேர்ந்தெடுக்கணும். அந்த அணி வெற்றி பெற்ற அணியாகும்.

6. வெற்றி பெற்ற அணியினர் ஒவ்வொருவருக்கும், G Square நிறுவனத்தின் 11-வது anniversary-ஐ கொண்டாடும் விதமாக 11 gram gold coin, பரிசாக வழங்கப்படும். அவர்களுக்கு gratification voucher board-ஐயும், இந்த பரிசுகளையும் platform-இல் வைத்து judges present பண்ணணும்.

Perform செய்யும் அணி platform-க்கு செல்லணும். மற்ற housemates, sofa-களில் உட்காரணும். Judges அவர்களின் panel-இல் உட்காரணும்.

Letter-ஐ படிச்சு முடிச்சதும், அணிகள் பிரிஞ்சு, topic-ஐ தேர்ந்தெடுத்து, தங்கள் preparation-ஐ தொடங்கலாம். Buzzer அடிச்சதும் அனைவரும் activity area-வுக்கு செல்லவும்.

இந்த விளம்பரங்களில் இடம் பெற வேண்டிய point-களின் summary:

1) City-க்கு உள்ளேயே plots.

2) Market விலை மதிப்பு கூடக்கூடிய Plots.

3) உலகத்தரம் வாய்ந்த amenities கொண்ட Plots.

4) G- Square city-யின் prime locations-ல plot-கள குறைந்த விலைக்கு வாங்கி, குறைந்த விலைக்கே விற்கவும் செய்யுது.

5) தெளிவான documentation கொண்ட Plots.

ஒவ்வொரு card-இலும், கீழே தரப்பட்டுள்ள advertisement topic-களில் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது.

1. நான்கு நண்பர்களுக்குள் G-square பற்றி உரையாடுவது.
2. ஒரு குடும்பத்துக்குள் plot தொடர்பாக நடக்கும் உரையாடல்.
3. G Square office-இல், sales executive-க்கும், customer-களுக்கும் இடையே நடக்கும் உரையாடல்.

3 ROSES

Brooke bond 3 Roses தமிழ்நாட்டின் number 1 தேயிலை brand-ஆகும். இது தமிழ்நாட்டில் மிகவும் வளமான பாரம்பரியம் மற்றும் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. 3 Roses தேநீர் அதன் நிறம், சுவை மற்றும் திடம் ஆகியவற்றின் சரியான கலவையால் அறியப்படுகிறது - ஒவ்வொரு கோப்பையிலும் சிறந்த தரமான தேநீர் வழங்கப்படுவதை உறுதி செய்கிறது. 3 Roses இப்போது புதிய நவீன தோற்றமுடைய பேக்கில் கிடைக்கிறது, ஆனால் தமிழ்நாட்டில் 80% க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்தும் அதே பழைய நம்பகமான தேநீராகவே உள்ளது. 3 Roses-உடன் இப்போது 3 Roses natural care-உம் கிடைக்கிறது - இஞ்சி, ஏலக்காய், அதிமதுரம், அஸ்வகந்தா மற்றும் துளசி ஆகிய 5 ஆயுர்வேதப் பொருட்களுடன் கூடிய ஒரு தனித்துவமான தேநீர் - உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தவும், உள்ளிருந்து உங்களை வலிமையாக்கவும் உதவும்.

3 Roses நிறம், சுவை, திடம் task-இல் பங்கேற்கும் அனைத்து போட்டியாளர்களுக்கும், 3 Roses-இன் வாழ்த்துகள்.

3 Roses நிறம், சுவை, திடம்

Housemates-க்கு ஒரு bowl-இல் chits தரப்பட்டுள்ளது. அதில் 2 chit-களில் judge என்று எழுதப்பட்டுள்ளது. Team A, team B, என்று தலா 6 chit-களில் எழுதப்பட்டுள்ளது. Judges, Team A, Team B என chit-களுக்கு ஏற்ப பிரிஞ்சு Bigg Boss-இடம் தெரிவிக்கணும்.

Activity area-ல ஒரு tea கடை அமைக்கப் பட்டிருக்கு.

அருகே, 3x3 என்ற அடிப்படையில், 9 tile-கள் கவிழ்த்து வைக்கப் பட்டிருக்கு. **நிறம், சுவை, திடம்** என்று **தலா 3 tile-களில்** எழுதப்பட்டிருக்கு. மூன்று வார்த்தைக்கு மூன்று வெவ்வேற challenge setup-கள் அமைக்கப்பட்டிருக்கு. ஒவ்வொரு round-இலும் ஒரு tile-ஐ

போட்டியாளர் எடுத்து, அதில் எழுதப்பட்டிருக்கும் வார்த்தைக்கான challenge-ஐ செய்யறது தான் task.

Team A & Team B என்று print செய்யப்பட்ட 9 tiles அந்தந்த அணிக்கு வழங்கப்பட்டிருக்கு.

ஒவ்வொரு round-இலும் இரு அணியில் இருந்தும் ஒரு போட்டியாளர் வரணும்.

Judge-களில் ஒருவருடன் சேர்ந்து, tea கடையின் முன்பு, **இருவரும் சா-பூ-த்ரி விளையாடணும்**. அதில் ஜெயிக்கும் போட்டியாளர், 9 tile-களில் ஒரு tile-ஐ எடுக்கணும். அந்த tile-இல் எந்த வார்த்தை வருதோ, அந்த வார்த்தைக்கான challenge-ஐ விளையாடணும். அதில் அந்த அணி வென்றால், அந்த tile-க்கு பதில், அவரவர் அணியின் பெயர் போட்ட tile-ஐ அந்த இடத்தில் வைக்கலாம். ஒருவேளை, அந்த அணி தோற்றால், அந்த இடத்தில், எதிரணி தங்களது tile-ஐ வைக்கலாம்.

எடுத்துக்காட்டு: சா-பூ-த்ரியில் Team B வென்று, எடுக்கும் tile-இல் 'திடம்' என்று எழுதி இருந்தால், அதற்கான challenge-ஐ team B விளையாடணும். அதில் அவர்கள் வென்றால், 'திடம்' tile இருந்த இடத்தில், Team B என்ற tile ஒன்றை வைக்கணும். ஒருவேளை Team B அந்த challenge-இல் தோற்றால், Team A அந்த இடத்தில் அவர்களது tile-ஐ வைக்கலாம்.

இப்படி **ஒன்பது round-கள், ஒன்பது tile-கள்**. Relay போல ரெண்டு அணியில் இருந்தும் ஒவ்வொரு போட்டியாளர் ஒவ்வொரு round-இலும் சா-பூ-த்ரி விளையாடணும்.

முடிவுல எந்த அணி தங்களோட tile-கள அதிகம் பதிய வச்சிருக்கோ, அந்த அணி வெற்றி பெற்ற அணியாகும். 3 tile-களை கொண்டு straight line (horizontal, vertical or diagnol) form செய்திருக்கும் அணிக்கு ஒரு bonus point வழங்கப்படும்.

நிறம், சுவை, திடம் வார்த்தைகளுக்கான challenge-களின் விபரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

நிறம்:

இந்த challenge-இல், tile-ஐ எடுத்த அணியில் இருந்து ஒரு நபர தேர்ந்தெடுத்து அனுப்பணும்.

Activity area-வில், ஒரு basket-இல் **red balloons** வைக்கப்பட்டிருக்கு. அருகே ஒரு circle வரையப்பட்டு அதில் **red & white பந்துகள்** வைக்கப்பட்டிருக்கு.

Buzzer அடிச்சதும், போட்டியாளர், ஒரு balloon-ஐ எடுத்துக் கொண்டு, circle-க்கு உள்ளே வந்து, **அந்த balloon தரையில் படாமல்**, காற்றில் தட்டி விட்ட படியே, **அத்தனை white பந்துகளையும்** circle-இன் நடுவில் இருக்கும் basket-க்குள் போடணும்.

End buzzer அடிக்கறதுக்குள்ள balloon தரையில் படாம, அத்தனை பந்துகளையும் basket-இல் போட்டிருந்தா மட்டுமே வெற்றி பெற்றதா அர்த்தம்.

Buzzer to buzzer: 1 minute.

சுவை:

இந்த challenge-இல், tile-ஐ எடுத்த அணியில் இருந்து ஒரு நபர தேர்ந்தெடுத்து அனுப்பணும்.

Activity area-வில், ஒரு table-இன் மேல், 6 வெவ்வேற flavor கொண்ட tea-கள் ஆறு cup-களில், அதன் straw-கள் மட்டுமே வெளியே தெரியும்படி வைக்கப்பட்டிருக்கு.

போட்டியாளர் 6 flavor-களையும் ஒவ்வொன்றாக சுவைக்கணும்.

ஆறையும் சுவைத்து முடிச்சதும், அருகே வைக்கப்பட்டிருக்கும் board-இல், 6 flavor-களையும், **அவர்கள் சுவைத்த வரிசையின்படி** சரியா எழுதணும். அப்படி எழுதி இருந்தா, அந்த அணி வெற்றி பெற்றதா அர்த்தம்.

கொடுக்கப்பட்டுள்ள flavor-கள்:

1. Plain Milk tea
2. இஞ்சி tea
3. ஏலக்காய் tea
4. புதினா tea
5. Lemon tea
6. சுக்கு tea

6 flavor-களையும் சுவைத்து முடித்து, board-இல் எழுத தரப்படும் நேரம் மொத்தம், **buzzer to buzzer: 1 minute**.

ஒவ்வொரு முறை இந்த challenge முடிஞ்சதும், table-இல் இருக்கும் slider-ஐ judge-களில் ஒருவர் நகர்த்தி, சரியான பதில்களை reveal செய்யவும்.

திடம்:

இந்த challenge-இல், tile-ஐ எடுத்த அணியில் இருந்து ஒரு நபர தேர்ந்தெடுத்து அனுப்பணும்.

அந்த நபர், Activity area-வில் உள்ள bowl-இல் இருந்து **ஒரு chit-ஐ** எடுக்கணும். அந்த chit-இல் ஒரு தமிழ் திரைப்பட பாடலின் வரிகள் எழுதப் பட்டிருக்கும். அந்த chit-ஐ judges-இடம் மட்டுமே காட்ட வேண்டும். பாடல் வரிகளை யாரும் சொல்லக் கூடாது.

Buzzer அடிச்சதும், **எந்த வார்த்தையும் சொல்லாமல்**, **ஒலி எழுப்பாமல்**, அந்த பாடலை குறிக்கும் ஒரு படத்தை, அருகே உள்ள board-இல் வரையணும். அந்த படத்தைக் கொண்டு, அது எந்த பாடல்னு அந்த அணியின் மற்ற போட்டியாளர்கள் சரியா கண்டு பிடிக்கணும்.

Buzzer to buzzer: 1 minute.

Alphabets & numbers-ஐ வரையக் கூடாது.

ஒன்பது round-களின் முடிவில் வெற்றி பெற்ற அணியை judges அறிவிக்கணும்.

மூன்று challenge-இன் போதும், விளையாடும் நபர்கள் தவிர மற்ற housemates, கொடுக்கப்பட்டுள்ள yellow line-களில் நிக்கணும். Judges, white box-களில் நிக்கணும்.

Vim liquid task 1

20 வருடங்களுக்கும் மேலான **legacy**-யுடன், **Vim**, இந்தியாவின் **number 1 dishwash brand**-ஆக இருந்து வருகிறது. இந்தியாவின் சமையல் அறைகளில் ஒரு முக்கிய பங்காக இருக்கிறது. **Vim**, பல புதுமையான கண்டுபிடிப்புகளால், **market**-ஐ திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. **Vim liquid**, அப்படிப்பட்ட ஒரு கண்டுபிடிப்பாகும். அற்புதமான நுரை மற்றும் நறுமணத்துடன், **Vim Liquid** பாத்திரங்களைக் கழுவுவதை எல்லோரும் செய்யும்படி, மிகவும் எளிதாக்குகிறது. **Vim**, இதன் செயல்திறனை மேலும் மேம்படுத்தி, அதன் **best ever formula**-வை அறிமுகப் படுத்தி உள்ளது - **tropical** எலுமிச்சைகளின் புத்துணர்ச்சி கொண்ட புதிய **Vim Liquid**-விடாப்பிடியான அசைவ உணவு வாடையையும் ஒரே **wash**-இல் போக்கக் கூடியது. அதனால், இப்போது அனைவரும், பாத்திரங்களை கழுவும் கவலை இல்லாமல், அவர்களுக்கு விருப்பமான அசைவ உணவை உண்டு மகிழலாம்.

VIM liquid dishwash challenge

Housemates-க்கு ஒரு bowl-இல் chits தரப்பட்டுள்ளது. அதில் 2 chit-களில் judge என்று எழுதப்பட்டுள்ளது. Team A, team B என்று தலா 6 chit-களில் எழுதப்பட்டுள்ளது.

‘Judge’ என்ற chit-களை எடுப்பவர்கள் **நடுவர்களாகவும்**, **Team A, team B** chit-களை எடுப்பவர்கள் இரண்டு அணிகளாகவும் பிரிஞ்சு Bigg Boss-க்கு அறிவிக்கணும்.

Task நடக்கும் போது, fish curry சமைக்கப் பயன்படுத்தப்பட்ட பாத்திரங்கள் அனுப்பப்படும். அவற்றை போட்டியாளர்கள் collect செய்து, சுத்தமா கழுவி முடிக்கறது தான் task.

விபரங்கள்:

Garden area-ல பாத்திரங்கள் வர ஒரு conveyer belt அமைக்கப் பட்டிருக்கு. இரு அணிகளுக்கும் பாத்திரங்கள கழுவ sink-கள் அமைக்கப்பட்டிருக்கு.

ஒவ்வொரு அணயில் இருந்தும், ஒருத்தர் பாத்திரங்கள collect பண்ணணும், மற்றவர்கள் பாத்திரங்கள கழுவணும்.

ஒவ்வொரு முறை பாத்திரங்களின் sound play செய்யப் படும் போதும், conveyer belt-இல் பாத்திரங்கள் அனுப்பப் படும். இரண்டு அணியில் இருந்தும் collect செய்யும் நபர்கள், அதிக பாத்திரங்கள collect செய்ய முந்தணும்.

ஒவ்வொரு முறையும் வெவ்வேற நபர்கள் பாத்திரங்கள collect செய்யலாம்.

Collect செய்த பாத்திரங்கள, அவரவர் அணியின் மற்ற 5 போட்டியாளர்களுக்கு வழங்கணும். அந்த நபர்கள், அவர்களின் sink-ல பாத்திரங்கள Vim Liquid பயன்படுத்தி சுத்தமா கழுவி, கொடுக்கப்பட்டுள்ள tray-இல் அடுக்கணும்.

இது ஒரு buzzer to buzzer task.

End buzzer அடிச்சதும், ரெண்டு அணிகளும் அவரவர் tray-கள judges table-இல் வைக்கணும். எந்த அணி அதிக பாத்திரங்கள collect செஞ்சு, சுத்தமா கழுவி இருக்காங்கனு judges check பண்ணி, வெற்றி பெற்ற அணிய அறிவிக்கணும்.

JUDGES:
Judges, கழுவப்பட்ட பாத்திரங்கள கீழே குறிப்பிட்டுள்ள points-இன் அடிப்படையில் judge செய்து வெற்றி பெற்ற அணியை தேர்ந்தெடுக்கணும்.

1. கழுவப்பட்ட பாத்திரங்களின் எண்ணிக்கை.
2. Lemon Quotient: பாத்திரங்களில் fish curry சமைக்கப்பட்ட வாடை எந்த அளவு அகற்றப்பட்டிருக்கு.
3. எவ்வளவு சுத்தமாக பாத்திரங்கள் கழுவப்பட்டிருக்கு.

BRITANNIA JIM JAM

Britannia Jim Jam Pops, top layer இல்லாத ஒரு தனித்துவமான creme biscuit. எனவே, நீங்கள் creme-ஐ சாப்பிட விரும்பினால், top and bottom layer-ஐ, தனித்தனியே பிரிக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு கையாலேயே சாப்பிடலாம்.

இந்த task-ல Britannia Jim Jam Pop-களை பல விதமான creative-ஆன வழிகளில் நீங்க சாப்பிடப் போறீங்க.

Britannia Jim Jam pops One Hand Challenge

Housemate-களில், இரண்டு பேர் **Captain**-களாக இருக்க முன்வரணும். அந்த இரண்டு பேரும், அவங்க அணிக்கு (Team A, Team B) **தலா 5 நபர்கள** தேர்ந்தெடுக்கணும். மீதம் இருக்கும் ஒரு நபர் judge ஆக இருக்கணும்.

Activity area-ல வெவ்வேற setup-கள் செய்யப்பட்டிருக்கு. போட்டியாளர்கள், 5 round-களில், 5 creative-ஆன விதங்களில் Britannia Jim Jam Pops biscuit-களை சாப்படறது தான் task.

முதல் நான்கு round-களில், ஒவ்வொரு round-இலும், இரு அணியில் இருந்தும், **ஒவ்வொருத்தர்** விளையாடணும். **5-வது round**-இல், **இரு அணியில் இருந்தும், தலா 2 போட்டியாளர்கள்** விளையாடணும். அந்தந்த round-க்கு, கொடுக்கப்பட்டுள்ள விதத்தில், bowl-களில் வைக்கப்பட்டுள்ள Britannia Jim Jam pops biscuit-ஐ சாப்பிடணும்.

Round 1:

Biscuit-ஐ, coin போல **toss** செய்து, அது கீழே விழாமல், வாயால் **catch** செய்து சாப்பிடணும். Buzzer அடிக்கறதுக்குள்ள, யார் அதிக biscuit-களை toss பண்ணி சாப்பிட்டிருக்காங்களோ, அந்த நபரின் அணிக்கு ஒரு point.

Round 2:

Biscuit-ஐ வாயில் மேல் பல் வரிசைக்கும் கீழ் பல் வரிசைக்கும் இடையே **vertical-ஆக வைத்து**, அப்படியே கடித்து, சாப்பிடணும். Buzzer அடிக்கறதுக்குள்ள அதிக biscuit-கள இந்த மாதிரி சாப்பிட்டு முடிக்கறவங்களோட அணிக்கு ஒரு point.

Round 3:

Biscuit-இல் இருக்கும், **jam-ஐயும், creme-ஐயும் மட்டும் சரியா சாப்பிடணும்**, Biscuit disk-ஐ சாப்பிடக் கூடாது. Buzzer அடிக்கறதுக்குள்ள முதல்ல சரியா சாப்பிட்டு முடித்த போட்டியாளர் வெற்றி பெற்றவராவார். அந்த நபரின் அணிக்கு ஒரு point.

Round 4:

போட்டியாளர்கள், chair-களில் உட்காரணும். Biscuit-ஐ **நெற்றியில் vertical-ஆக வைத்து**, அதை கையால் தொடாமல், முகத்தில் **roll ஆகி** வரும் போது, வாயால் **catch** செய்து சாப்பிடணும். Buzzer அடிக்கறதுக்குள்ள அதிக biscuit-கள இந்த மாதிரி சாப்பிட்டு முடிக்கறவங்களோட அணிக்கு ஒரு point.

Round 5:

இந்த round-இல் இரண்டு அணியில் இருந்தும், தலா 2 பேர் விளையாடணும். ஒரு நபர் biscuit-ஐ, கொடுக்கப்பட்டுள்ள T-stand-இன் **start point-ல வச்சு உருட்டி விட்டு**, இன்னொரு நபர், end point-ல காத்திருந்து, biscuit stand-ஐ விட்டு கீழே விழாமல், வாயால் **catch** செய்து சாப்பிடணும்.

ஒவ்வொரு round-உம் **buzzer to buzzer**. 5 round-களின் முடிவில், எந்த அணி **அதிக point-கள்** எடுத்திருக்காங்களோ, அந்த அணி, task-இல் வெற்றி பெற்ற அணியாகும். ஒவ்வொரு round-உம் முடியும் போது, judge, வெற்றி பெற்றது எந்த அணி-னு அறிவிக்கணும்.

போட்டியாளர்கள், விளையாடும் போது, **ஒரு கையை மட்டுமே பயன்படுத்த** வேண்டும். ஒவ்வொரு round-இலும் விளையாடுபவர்கள், கொடுக்கப்பட்டுள்ள belt-இல் ஒரு கையை பின்னால் கட்டிய படி விளையாடணும்.

விளையாடும் நபர்கள் தவிர மற்ற housemates white line-களில் நிக்கணும்.

Bowl-களில் biscuit-கள் தீரும் போது, judge, pack-களை பிரித்து, biscuit-களை bowl-களில் போடவும்.

DOMEX AUDIENCE TASK

கழிப்பறைகளில் இருந்து வரும் துர்நாற்றம் பெரும்பாலான வீடுகளில் அசௌகரியத்துக்கு முக்கிய காரணமாக உள்ளது.
தற்போதைய **toilet cleaner**-கள், பார்வைக்கு மட்டுமே சுத்தமான கழிப்பறையை தருகிறது. தொடர்ந்து சுத்தம் செய்தாலும், துர்நாற்றம் வீசுகிறது மற்றும் நாளுக்கு நாள் மோசமாகிறது.

Domex Toilet Cleaner, இந்த நிலையை மாற்றுகிறது.
Domex 3 நாட்களுக்கு துர்நாற்றத்தைத் தடுக்கிறது மற்றும் கழிப்பறையை சுத்தமாகவும், பளபளப்பாகவும், கறை இல்லாததாகவும் மாற்றுகிறது.
Domex toilet cleaner-இல் உள்ள **proprietary ODOUR BLOCK** தொழில்நுட்பம், துர்நாற்றம் திரும்புவதை **3** நாட்கள் வரை தடுக்கிறது.
இந்த **brand** வாடிக்கையாளர்களை அவர்களின் தற்போதைய **toilet cleaner**-களின் தேர்வை, கேள்விக்கு உட்படுத்துவதுடன், துர்நாற்றத்தை தடுத்து, அற்புதமான தூய்மையைத் தரும் **Domex Toilet Cleaner**-ஐ முயற்சிக்கவும் ஊக்குவிக்கிறது.

DOMEX நாற்றம் **BLOCKER**

Bigg Boss நிகழ்ச்சியின் ரசிகர்களுக்காக Domex ஒரு விளையாட்டை அறிமுகப் படுத்துகிறது. இந்த விளையாட்டின் மூலம் மக்கள் தங்களோட favourite housemate-களுக்கு தங்களோட ஆதரவை வெளிப்படுத்தலாம்.

Housemates கீழே தரப்பட்டுள்ள 4 அணிகளாக பிரிஞ்சு அறிவிக்கணும். 3 அணிகளில் தலா மூன்று பேரும், ஒரு அணியில் நான்கு பேரும் இருக்கணும்.

1) **Domex warriors**
2) **Domex rangers**
3) **Domex shooters**
4) **Domex Titans**

ரசிகர்கள், Bigg Boss நிகழ்ச்சி ஒளிபரப்பின் போது காட்டப்படும் **QR Code**-ஐ **scan** செய்து '**Domex** நாற்றம் **blocker**' game-ஐ அவர்களின் mobile phone-களில், அவர்களின் favourite Bigg Boss அணிக்காக விளையாடலாம்.

ஒவ்வொரு நாளும் அவர்கள் விளையாடியதற்கான **score** விபரங்கள் housemates-க்கு storeroom வழியே அனுப்பப் படும். Housemates அவற்றை

தினமும், Garden area-வில் வைக்கப் பட்டிருக்கும் **Domex Scoreboard-**இல் **update** செய்யணும்.

ரசிகர்கள் விளையாடி அதிக score பெற்றிருக்கும் அணி, '**DOMEX PEOPLE'S CHOICE TEAM**' ஆகத் தேர்வாகும்.

இந்த letter-ஐ garden area-வில் white mark-ல நின்னு படிக்கணும். மத்த housemates yellow line-ல நிக்கணும்.

DOMEX TASK 1

